# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2086/15 - 2018 අගෝස්තු මස 29 වැනි බදාදා - 2018.08.29

*2086/15 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) – மாகாண சபை

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமத்திய மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

வடமத்திய மாகாணத்தின் ஆளுநர் மாரப்புலிகே ஜயசிங்க ஆகிய என்னால், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இணைவிதி) சட்டத்தில் 2 ஆவது சரத்துடன் வாசிக்கக்கூடிய 252 ஆவது அத்தியாயம், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 289(1) சரத்தில் விடயதான அமைச்சருக்குரிய அதிகாரத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தயாரிக்கப்பட்ட மாநகர சபை நகர பிதா, பிரதி நகர பிதா மற்றும் அங்கத்தவர்களுக்காகவுள்ள கீழே காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கான கட்டளைகள் இதன் மூலம் விதிக்கப்படுகின்றது. இக்கட்டளை 2018, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்பட வேண்டும்.

மாரப்புலிகே ஜயசிங்க,<br>ஆளுநர்,<br>வடமத்திய மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,<br>வடமத்திய மாகாணம்,<br>2018, யுன் 13.

**கட்டளைகள்**

1. மாநகர சபை நகர பிதாக்களுக்கு மாநகர சபையின் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்காக எரிபொருள் வரையறை –

(i) மாநகர சபையின் வாகனம் பயன்படுத்தப்பட்டிருப்பின் மற்றும் ஒரு பிரதேச செயலகத்துடன் மாநகர சபைக்காக மாதமொன்றிற்கு எரிபொருள் டீசல் 400 லீற்றருக்கு அதிகரிக்காமல் ; அல்லது

(ii) மாநகர சபை வாகனமல்லாத சந்தர்ப்பத்தில் மேலே குறிப்பிட்ட எரிபொருளுக்கான செலவு வரையறையின்கீழ் விடயதான அமைச்சரின் அனுமதியைப் பெற்று, தனிப்பட்ட வாகனமொன்றுக்காக சபை நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள முடியும்.


1A - PG 4187 — 187 (2018/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. போக்குவரத்துச் செலவு மற்றும் அதனுடன் கூடிய கொடுப்பனவு -

(i) மாநகர சபை நகர பிதாக்களுக்கான தாபனவிதிக் கோவையின் விதிமுறைகளின்கீழ் முழு நாளொன்றுக்காக ரூபா 500.00 இற்கு அதிகரிக்காமல் கொடுப்பனவொன்றைச் செலுத்த முடியுமானதோடு, இக்கொடுப்பனவை மாதமொன்றுக்கு 10 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்படும்.

(ii) ஒன்றுதிரட்டிய கொடுப்பனவு செலுத்துவது மாநகர சபைப் பிரதேசத்திற்கு அப்பால் உத்தியோகபூர்வ போக்குவரத்துக்காக மாத்திரம் தாபனக்கோவையின் விதிகளுக்கமைய இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

(iii) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் செய்யப்படுகின்ற போக்குவரத்துக்காக இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட மாட்டாது.

(iv) மேலே குறிப்பிட்டவாறு போக்குவரத்துக் கட்டணம் மற்றும் ஒன்று திரட்டப்பட்ட கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வது குறித்த மாநகர சபை சம்பந்தமான போக்குவரத்துக்காக மாத்திரமே. மாநகர சபையின் நடவடிக்கைக்கான விழாக்கள், கருத்தரங்குகள் அல்லது கூட்டங்கள் ஆகியவற்றுக்காக உத்தியோகபூர்வமான அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்கள் தவிர கருத்தரங்குகள் அல்லது கூட்டங்களுக்கு கலந்துகொள்வதற்குச் செல்வது காரணமாக மாநகர சபையின் நிதியிலிருந்து போக்குவரத்துக் கட்டணம் அல்லது ஒன்றுதிரட்டப்பட்ட நிதி பெற்றுக்கொள்ள உரிமையில்லை.

3. உபசரிப்புக் கொடுப்பனவு -

(i) மாநகர சபை நகர பிதாக்களுக்கு உபசரிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் 3,000.00 ரூபா கொடுப்பனவு சபை நிதியிலிருந்து செலவு செய்ய முடியும். அதற்காக செலவினம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ii) மாநகர சபை உதவி நகர பிதாக்களுக்கு உபசரிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் 750.00 ரூபா கொடுப்பனவு சபை நிதியிலிருந்து செலவு செய்ய முடியும். அதற்காக செலவினம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(iii) மாநகர சபையின் சபைக் கூட்டங்கள் மற்றும் கமிட்டிக் கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் அங்கத்தவர்களுக்கு உபசரிப்புக்காக கலந்துகொள்ளும் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒரு கூட்டத்திற்கு 100.00 ரூபா அதிகபட்சமாக சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

4. தொலைபேசிக் கொடுப்பனவு -

(i) நகர பிதாவின் மற்றும் பிரதி நகர பிதாவின் வீட்டுத் தொலைபேசிக்காக சபை நிதியிலிருந்து கீழேயுள்ளவாறு கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது :

   (i) நகர பிதாவுக்கு மாதாந்தம் - ரூபா 4,000.00

   (ii) பிரதி நகர பிதாவுக்கு மாதாந்தம் - ரூபா 2,500.00

5. சபைக் கூட்டங்கள் மற்றும் கமிட்டிக் கூட்டங்களுக்கு கலந்து கொள்வதற்கான கொடுப்பனவு -

(i) நகர பிதா, பிரதி நகர பிதா மற்றும் அங்கத்தவர்கள் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு 500.00 ரூபா கொடுப்பனவாக சபை நிதியிலிருந்து செலவிடப்படும்.

6. மாநகர சபை நகர பிதாவின் தனிப்பட்ட ஊழியர் குழாத்திற்கான கொடுப்பனவு -

(i) மாநகர சபையின் நகர பிதாவின் தனிப்பட்ட செயலாளரொருவரை நியமிக்க முடியுமானதோடு, அவருக்குக் கொடுப்பனவாக 15,000.00 ரூபாவிற்கு அதிகரிக்காமல் சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

(ii) மாநகர சபையின் நகர பிதாவுக்கு மக்கள் பிரதிநிதியொருவரை நியமிக்க முடியுமானதோடு, அவருக்குக் கொடுப்பனவாக 10,000.00 ரூபாவிற்கு அதிகரிக்காமல் சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

**வடமத்திய மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

வடமத்திய மாகாணத்தின் ஆளுநர் மாரப்புலிகே ஜயசிங்க ஆகிய என்னால், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இணைவிதி) சட்டத்தில் 2 ஆவது சரத்துடன் வாசிக்கக்கூடிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 184(1) (இ), (ஈ), (உ) சரத்துக்களில் விடயதான அமைச்சருக்குரிய அதிகாரத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பிரதேச சபைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்காக கீழே காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கான திட்டங்கள் இத்தால் விதிக்கப்படுகின்றது. இத்திட்டம் 2018, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்பட வேண்டும்.

மாரப்புலிகே ஜயசிங்க,
ஆளுநர்,
வடமத்திய மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
வடமத்திய மாகாணம்,
2018, யுன் 13.

**திட்டங்கள்**

1. பிரதேச சபைத் தலைவர்களுக்குப் பிரதேச சபையின் உத்தியோகபூர்வ போக்குவரத்துக்காக எரிபொருள் வரையறை –

(i) பிரதேச சபையின் வாகனம் பயன்படுத்தப்பட்டிருப்பின் மற்றும் ஒரு பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்ட பிரதேச சபைக்காக மாதமொன்றிற்கு எரிபொருள் டீசல் 400 லீற்றருக்கு அதிகரிக்காத பெறுமதி ; அல்லது

(ii) இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகள் இணைந்த பிரதேச சபைக்காக மாதாந்த எரிபொருள் டீசல் 500 லீற்றருக்கு அதிகரிக்காத அளவுக்கான செலவை மேற்கொள்ள முடியும்.

(iii) பிரதேச சபையின் வாகனமல்லாத சந்தர்ப்பங்களில் மேலே எரிபொருளுக்கான செலவு வரையறையின்கீழ் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு தனிப்பட்ட வாகனத்திற்காக சபை நிதியத்திலிருந்து செலவினை மேற்கொள்ள முடியும்.

2. போக்குவரத்துச் செலவு மற்றும் ஒன்றுதிரட்டிய கொடுப்பனவுகள் –

(i) பிரதேச சபைத் தலைவர்களுக்காக தாபனவிதிக் கோவையின் சட்டதிட்டங்களின்கீழ் ஒரு நாள் பூராகவும் 500.00 ரூபாவிற்கு அதிகரிக்காமல் கொடுப்பனவொன்றைச் செலுத்த முடியுமானதோடு, இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வது மாதமொன்றில் 10 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) ஒன்றுதிரட்டிய கொடுப்பனவு செலுத்துவது பிரதேச சபைப் பிரதேசத்திற்கு வெளியே உத்தியோகபூர்வ போக்குவரத்துக்காக மாத்திரம் தாபனவிதிக் கோவையின் விதிகளுக்கமைய இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

(iii) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் செய்யப்படுகின்ற போக்குவரத்துக்காக இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட மாட்டாது.

(iv) மேலே குறிப்பிட்டவாறு போக்குவரத்துக் கட்டணம் மற்றும் திரட்டப்பட்ட கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வது குறித்த பிரதேச சபை சம்பந்தமாக உத்தியோகபூர்வமாக மேற்கொண்ட போக்குவரத்துக்காக மாத்திரமே. பிரதேச சபையின் நடவடிக்கைக்கான விழாக்கள், கருத்தரங்குகள் அல்லது கூட்டங்கள் ஆகியவற்றுக்காக உத்தியோகபூர்வமான அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்கள் தவிர கருத்தரங்குகள் அல்லது கூட்டங்களுக்கு கலந்துகொள்வதற்கு செல்வது காரணமாக பிரதேச சபையின் நிதியிலிருந்து போக்குவரத்துக் கட்டணம், திரட்டப்பட்ட நிதி பெற்றுக்கொள்ள உரிமையில்லை.

3. உபசரிப்புக் கொடுப்பனவு -

(i) பிரதேச சபைத் தலைவர்களுக்கு உபசரிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் 2,000.00 ரூபா கொடுப்பனவு சபை நிதியிலிருந்து செலவு செய்ய முடியும். அதற்காக செலவினம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ii) பிரதேச சபையின் சபைக் கூட்டம் மற்றும் கமிட்டிக் கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் அங்கத்தவர்களுக்கு உபசரிப்புக்காக கலந்துகொள்ளும் ஒரு அங்கத்தவருக்காக ஒரு கூட்டத்திற்கு 100.00 ரூபாவிற்கான அதிகரிப்பின்கீழ் சபை நிதியில் செலவினை மேற்கொள்ள முடியும்.

4. தொலைபேசிக் கொடுப்பனவு -

(i) தலைவருக்கு மற்றும் பிரதித் தலைவரின் வீட்டுத் தொலைபேசிக்காக சபை நிதியிலிருந்து கீழேயுள்ளவாறு கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது :

(i) தலைவருக்கான மாதாந்தம் - ரூபா 3,000.00

(ii) பிரதித் தலைவருக்கான மாதாந்தம் - ரூபா 2,000.00

5. சபைக் கூட்டங்கள் மற்றும் கமிட்டிக் கூட்டங்களுக்கு கலந்து கொள்வதற்கான கொடுப்பனவு -

(i) தலைவர், பிரதித் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு 500.00 ரூபா கொடுப்பனவாக சபை நிதியிலிருந்து செலவிடப்படும்.

6. பிரதேச சபையின் தலைவரின் தனிப்பட்ட ஊழியர் குழாத்திற்கான கொடுப்பனவு -

(i) பிரதேச சபையின் தலைவர் தனிப்பட்ட செயலாளரொருவரை நியமிக்க முடியுமானதோடு, அவருக்கான கொடுப்பனவாக 7,500.00 ரூபாவிற்கு அதிகரிக்காமல் சபை நிதியிலிருந்து செலவிட முடியும்.

09-256/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.